පෙර දී ස්වාධීන හෝ සහසන්ධීය වූ සංඝටක ඒකකයන් අතර විවිධත්වය තුළ ඒකාබද්ධතාවයක් ඇති කිරීමේ අරමුණැති ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය පිළිවෙළක් අනුකලනීය ෆෙඩරල්වාදය ලෙස හැඳින් වේ. මෙහි අරමුණ නම් සංඝටක ඒකකයන්ගේ බලතලවලට ගරු කරමින්, තම බල ක්ෂේත්‍රයන් තුළ ජනතාව වෙත ඍජු අධිකාරී බලයක් සහිත ශක්තිමත් මධ්‍යම රජයක් ස්ථාපිත කිරීමයි. අනුකලනීය ෆෙඩරල්වාදී ප්‍රතිපත්තියක් අනුගමනය කරමින් සිටින ස්වාධීන රාජ්‍යයන්ගේ දේශපාලන සංගමයකට උදාහරණයක් ලෙස යුරෝපීය සංගමය දැක්විය හැකි ය.

## இணைப்புச் சமஷ்டி

முன்னர் சுதந்திரமுடையனவாக இருந்த அரசுகள் அல்லது ஒரு கொன்பெடரேசனாக இணைந்திருந்த அரசுகள் தமக்கிடையே ஒற்றுமையையும் ஒருமைத் தன்மையையும் உண்டாக்கும் முறையில் அரசியல் யாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளலை இது குறிக்கும். பலமுள்ள மத்திய அரசை உருவாக்குவதே நோக்கமாக இருக்கும். மத்திய அரசின் பலத்தை கூட்டும் வேளை அரசுகளின் தனித்துவமும் பேணப்படும். தனித்தனி அரசுகளாக இருந்த நாடுகள் ஒன்று சேர்ந்து இணைப்புச் சமஷ்டியை நோக்கிச் செல்வதற்கு ஐரோப்பிய யூனியன் சிறந்த உதாரணமாகும்.

## Integrative Federalism

Integrative federalism refers to a constitutional order that seeks to achieve unity in diversity among previously independent or confederated component entities. The goal is to establish an effective central government with direct authority on the people inside its fields of competence while respecting the powers of the component entities. The European Union is an example of a political union of independent states pursuing a policy of integrative federalism.

## 64

### උනන්දු කණ්ඩායම

උනන්දු කණ්ඩායමක් (සහ බලපෑම් හෝ යම් මතයක් වෙනුවෙන් පෙනී සිටින කණ්ඩායමක්) යනු තමන්ට වාසිදායක වන තීරණ ලබා ගැනීම සඳහා දේශපාලන ආයතන සහ පුළුල් ලෙස ජනතාව වෙත බලපෑමක් කරන කණ්ඩායමකි. මෙය දේශපාලන පක්ෂවලින් වෙනස් වන්නේ උනන්දු කණ්ඩායමක් තනතුරු සඳහා තරඟ නොකරන සහ ඔවුන්ගේ ක්‍රියාකාරකම් විශේෂිත කරුණු වලට සීමා වී පවතින බැවිනි. වැඩිදුරටත් උනන්දු කණ්ඩායමක් 'ලොබි' කණ්ඩායමකින් ද වෙනස් වන්නේ ඔවුන් ව්‍යවස්ථාදායක හා විධායක තීරණයන්ට බලපෑම් කිරීමට උත්සාහ කරනවා පමණක් නොව ඇතැම් කරුණු සම්බන්ධයෙන් පුළුල් ලෙස ජනතාව දැනුවත් කිරීම සහ ඔවුන් වෙත බලපෑම් කිරීම ද සිදු කරන බැවිනි.

### நலன்குழு, அக்கறைக் குழு

தனக்குச் சார்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் அரசியல் கட்சிகளின் மீதும், பொதுமக்கள் மீதும் செல்வாக்குச் செலுத்த முயற்சிக்கும் குழுவே நலன்குழுவாகும். இக்குழுக்களை அமுக்கக் குழுக்கள், வாதாட்டக் குழுக்கள் என்றும் கூறுவர். நலன்குழுக்கள் (பாராளுமன்றம், அமைச்சு) நிறுவனப் பதவிகளுக்காக அரசியல் கட்சிகள் போன்று போட்டியிடுவதில்லை. அவை குறிப்பிட்ட சில பிரச்சினைகளின் தீர்வை மையமாகக் கொண்டு செயற்படுவன. நலன் குழு அழுத்தக்குழுவில் (Lobby) வேறுபட்டது. அழுத்தக் குழு சட்ட ஆக்கம், நிர்வாகம் தொடர்பான தீர்மானங்களில் அழுத்தம் கொண்டு வருவதோடு தன் பணிகளை நிறுத்திக் கொள்ளும். நலன் குழு பொது மக்கள் மத்தியில் குறித்த பிரச்சினைகளை எடுத்துச் செல்வதிலும் அக்கறை செலுத்தும்.

### INTEREST GROUP

An interest group (also a pressure or an advocacy group) is a group that exercises influence on political institutions and the broader public in order to secure decisions favourable to it. Unlike a political party, an interest group does not run for office and its activities are restricted to particular issues. An interest group is also different from a lobby as it does not only try to influence legislative and executive decisions, but also seeks to inform and influence the broader public with regard to certain issues.

## 65

### අතුරු ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය විධි විධාන

අතුරු ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය විධිවිධානයන් යනු අවසාන ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවක් සම්මත කොට ගන්නා තෙක් නීතිය ලෙස බලපවත්වන තාවකාලික ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය එකඟතා වේ.

### இடைக்கால அரசியல் யாப்பு ஏற்பாடுகள்

இடைக்கால அரசியல் யாப்பு ஏற்பாடுகள் தற்காலிகமானவை. முழுமையாக ஏற்று அங்கீகரிக்கப் படாதவை. அரசியல் யாப்பு ஒன்றை இறுதியாக ஏற்று நடைமுறைப்படுத்தும் வரை இடைக்கால ஏற்பாடாக செயற்படுத்தப்படும் யாப்புச் சட்டத்தை இத் தொடர் குறிப்பிடும்.

### INTERIM CONSTITUTIONAL ARRANGEMENTS

Interim constitutional arrangements are provisional constitutional agreements which are in place temporarily until the adoption of a final constitution. They serve as the law providing for the basic structure of government until the adoption of the final constitution.

## 66

## අභ්‍යන්තර ස්වයං නිර්ණය

අභ්‍යන්තර ස්වයං නිර්ණය අයිතිය යනු ජනතාවකට තම දේශපාලන පක්ෂපාතීත්වය තෝරාගැනීම, තමන් ඇතුළත්ව ජීවත්වන දේශපාලන ක්‍රමයට බලපෑම් කිරීම, තම සංස්කෘතික, ජනවාර්ගික, ඓතිහාසික හෝ භෞමික අනන්‍යතාවය සුරක්ෂිත කරගැනීම යනාදියට ඇති අයිතියයි. එසේ වුවද අභ්‍යන්තර ස්වයං නිර්ණය අයිතිය මගින් ජනතාවකට රාජ්‍යයෙන් කැඩී වෙන්වීයාමට ඉඩකඩ නොලැබේ. එමගින් ජනතාවකට ජාතික දේශපාලන ක්‍රමය තුළින් තම අභිලාෂයන් ප්‍රකාශ කිරීමට කටයුතු සලසනු ලැබේ. අභ්‍යන්තර ස්වයං නිර්ණයට ඇති අයිතිය, බාහිර ස්වයං නිර්ණයට (හෝ ස්වයං නිර්ණය අයිතියට) ඇති අයිතියෙන් වෙන්කොට දැක්විය යුතුවේ.
ස්වයං නිර්ණය අයිතිය මගින් ජනතාවකට බාහිර පාලනයෙන් විමුක්තිය ලබා ස්වාධීන රාජ්‍යයක් බවට පත්වීමට ඇති අයිතිය අදහස් වේ.

## உள்ளக சுய நிர்ணயம்

உள்ளக சுய நிர்ணய உரிமை என்றும் குறிப்பிடப்படும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் துணை ஆணைக்குழுவொன்று இது பற்றிய வரைவிலக்கணத்தை எடுத்துக் கூறியது. சிறுபான்மையினர்களுக்கு பாரபட்சம் காட்டுதலைத் தடுத்தல், அவர்களின் பாதுகாப்பு என்பன பற்றிய இந்தத் துணை ஆணைக்குழு ஓர் மக்கள் குழுமத்திற்குள்ள உரிமையை இவ்வாறு விளக்கியது. "ஒரு மக்கள் குழுமத்திற்கு (a people) தாம் விரும்பியபடி அரசியல் நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளவும், தாம் வாழும் பகுதியின் அரசியல் ஒழுங்கை தம் செல்வாக்குக்கு உட்பட்டதாக ஆக்கவும், தமது பண்பாட்டு இனக்குழுமம் பண்புகளையும், வரலாறு, பிரதேச அடையாளம் என்பனவற்றையும் பாதுகாக்கவும் உரிமை கொண்டுள்ளது". உள்ளக சுய நிர்ணய உரிமை அம்மக்கள் குழுமத்திற்கு பிரிந்து போவதற்கான உரிமையை வழங்குவதாக பொருள் கொள்ளப்படமாட்டாது. தமது அபிலாசைகளை நாட்டின் முறைமைக்கு ஊடாகவே வெளிப்படுத்த வேண்டும் என உள்ளக சுயநிர்ணயம் என்னும் கருத்து எடுத்துக் கூறுகிறது. "A People" - "மக்கள்" என்னும் சொல் இக்கூற்றில் உள்ளது. இது சட்டரீதியாக வரையறை செய்யப்பட்டதன்று. இதன் கருத்து யாது என்பது வரையறுக்கப்படவில்லை. ஒரு குழு "மக்கள்" என்ற தகுதியை எப்போது அடைகிறார்கள் என்பது விளக்கமானது. இனக்குழுமம், மொழி சமயம் சார்ந்த அடையாளங்களையும் பண்பாட்டு பிணைப்புக்களையும் ஒரு குழு எந்தளவுக்கு கொண்டிருக்கிறது, தன்னைப் பிற குழுக்களில் இருந்து வேறுபட்ட ஒரு குழுவாக அது கருதுகின்றதா என்றும் கேள்விகளைப் பொறுத்தே "'மக்கள்" என்ற தகுதியை அக்குழு பெறுகின்றது. உள்ளக சுய நிர்ணய உரிமையை வெளியக சுய நிர்ணய உரிமை என்ற கருத்துடன் இணைத்து வேறுபடுத்திப் பார்த்தல் வேண்டும். வெளியக சுயநிர்ணயம் (சுய நிர்ணயம்) அந்நியர் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று சுதந்திரம் பெறுவதைக் குறிப்பிடும். சர்வதேச சட்டத்தில் இந்த உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக இக் கருத்து அந்நிய நாடொன்றின் ஆளுகைக்கு உட்பட்ட மக்களுக்கே பொருந்தும் என்று கருதப்படுகிறது. ஒரு பல்தேசிய நாடொன்றிற்குள் அமையும் தேசிய இனம் ஒன்று எந்தச் சூழ்நிலையில் அல்லது சந்தர்ப்பத்தில் சுய நிர்ணய உரிமையைக் கோர முடியும் என்பது விவாதத்துக்குரிய விடயமாக இருந்து வருகிறது.

## INTERNAL SELF-DETERMINATION

The right to internal self-determination is the right of a people to choose its political allegiance, to influence the political order in which it lives, and to preserve its cultural, ethnic, historical or territorial identity. The right to internal self-determination does not however allow a people to secede from a state; it requires a people to express its aspirations through the national political system.
The right to internal self-determination must be contrasted with the right to external self-determination (or the right to self-determination), which refers to the act by which a people liberates itself from alien rule and becomes an independent state.

## 67

### බල ප්‍රදේශය

මධ්‍යම, පළාත් හෝ නගර සභා යන කුමන හෝ මට්ටමක රජයක බලාධිකාරය පැතිර පවත්නා භූමිය හෝ කාර්ය ක්ෂේත්‍රය පැහැදිලි කිරීමට Jurisdiction යන වචනය භාවිත වේ.
උසාවියක හෝ වෙනත් ආයතනයක නෛතික බලාධිකාරිය පැතිරී ඇති භූමිය, විෂය ක්ෂේත්‍රය හෝ ක්‍රියාකාරිත්වය හැඳින්වීමට ද Jurisdiction යන්න භාවිත වේ.

### நியாயாதிக்கம்

மத்திய அரசு, மாநில அரசு, மாநகர அரசு என்பன கொண்டுள்ள அதிகார எல்லையை நியாயாதிக்கம் என்னும் சொல் குறிப்பிடுகிறது. அவற்றின் செயற்பாடுகளின் எல்லையையும், அதிகாரம் வலுவுடையதாகவிருக்கும் பிரதேச எல்லையையும் நியாயாதிக்கம் வரையறை செய்யும். நீதிமன்றங்கள், ஏனைய நிறுவனங்களின் அதிகார எல்லைகளை குறிப்பிடுவதற்கும் நியாயாதிக்கம் என்ற சொல் உபயோகிக்கப்படும்.

### Jurisdiction

The word jurisdiction defines the territory or fields of activities over which a government, be it central, provincial or municipal, has authority. It also refers to the territory or sphere of activity over which the legal authority of a court or other institution extends.

## 68

### නිදහසවල්

නිදහස (Liberty) යනු අනෙක් අයගේ හෝ රාජ්‍යයේ බලපෑමෙන් තොරව යමක් කිරීමට පුද්ගලයකුට ඇති අයිතිය යි. තම ජීවන මාර්ගයට අන්‍යයන් මැදිහත්වීම වැළැක්වීම සඳහා රාජ්‍යයේ මැදිහත්වීම ඉල්ලා සිටීමට ඇති අයිතිය ද මෙයින් අදහස් වේ.

Liberties සහ Freedoms යන වචන එකිනෙක වෙනුවෙන් වරින්වර හුවමාරු වී භාවිත වේ. කෙසේ නමුත් එම සංකල්ප දෙක අතර සියුම් වෙනසක් ඇත. Liberty යනු තමන් කැමති ලෙස යමක් කිරීමට ඇති හැකියාවයි. Freedom යනුවෙන් අදහස් කරන්නේ තේරීමකට බලපෑම් හෝ සීමාවන් නොමැති බවයි. වෙනත් වචනවලින් කිවහොත් Liberty දෙනු ලබන අතර Freedom ලබාගත යුතු දෙයකි.

### விடுதலை, சுதந்திரம், உரிமைகள்

(ஆங்கிலத்தில் பன்மையில் உள்ள இச் சொற்களை தமிழில் ஒருமையில் குறிப்பிடுதலே மரபு. பன்மையில் குறிப்பிடுவதாயின் "உரிமைகள்" என்று குறிப்பிடலாம்). பிறரின் தலையீடின்றி ஒரு செயலைச் செய்வதற்கு ஒருவருக்குள்ள சுதந்திரம் விடுதலை ஆகும். தன்னுடைய வாழ்க்கையில் பிறர் தலையிடுவதை தடுத்து நிறுத்தும்படி அரசைக் கேட்கும் உரிமையினையும் விடுதலை என்ற கருத்து உள்ளடக்கி உள்ளது. விடுதலை – சுதந்திரம் என்ற இரு சொற்களும் ஒரே அர்த்தம் உடையவை. இருந்த போதும் இவற்றுக்கிடையே சிறு வேறுபாடு உள்ளது. "விடுதலை" ஒருவர் தாம் விரும்பியபடி செயற்படும் நிலையைக் குறிப்பிடும். சுதந்திரம் ஒருவர் தமது தெரிவுகளை (choice) செய்யும் போது பிறரின் கட்டாயம், தடை என்பன இல்லாதிருத்தலைக் குறிக்கும். விடுதலை கொடுக்கப்படுவது, சுதந்திரம் ஒருவர் முயன்று பெறுவது.

### Liberties / Freedom

A liberty is the right of a person to do something without interference by others or by the state. It also refers to a right to claim state intervention to prevent others from interfering with one's way of life.
The words liberties and freedoms are used interchangeably. However, there is a subtle difference between both concepts. Liberty is the ability to do as one pleases. Freedom is the absence of coercion or constraint in choice. In other words, liberty is given while freedom must be earned.

## 69

### පළාත් පාලනය/ පළාත් ආණ්ඩු

පළාත් පාලනය /පළාත් ආණ්ඩු යනු රාජ්‍යයකට හෝ ෆෙඩරේශනයක සංයුක්ත ඒකකයකට වඩා කුඩා ප්‍රදේශයක (ගමක්, නගරයක, විශාල නගරයක, කෝරළයක්, දිස්ත්‍රික්කයක් හෝ කලාපයක් වැනි) වන පරිපාලන අධිකාරීන් යී එනම් ජාතික මට්ටමට පහළ පාලනයන්ය. එනමුත් පළාත් පාලන අධිකාරීන් මධ්‍යම රජයට යටත්වේ. එබැවින් ෆෙඩරල් ක්‍රමයක ප්‍රාන්ත ආණ්ඩුවලින් ඒවා වෙනස් වේ. සීමිත බදු අයකිරීමේ බලතල ඇතුළු පළාත් පාලන ආයතන සතු බලතල ජාතික මට්ටමෙන් පනවනු ලබන නීති මගින් සීමාවේ.

### உள்ளூராட்சி

அரசு அல்லது மாநில அரசு என்ற நிலையிலான அரசாங்கத்தில் இருந்து வேறுபட்ட அரசாங்க அமைப்புக்கள் இவை. கிராமம், சிறு நகரம், நகரம், மாவட்டம் என்ற வகையினவான ஒப்பீட்டளவில் சிறிய பகுதிகளின் நிர்வாக அதிகாரத்தைக் கொண்ட அமைப்புக்கள் உள்ளூராட்சி என்ற சொல்லால் குறிப்பிடப்படும். எவ்வாறாயினும் உள்ளூராட்சி அதிகார சபைகள் மத்திய அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டவை. எனவே, ஒரு சமஷ்டி முறைமையின் பிராந்திய அரசுகளில் இருந்து வேறுபட்டவை. வரையறுக்கப்பட்ட வரி அறவிடல் அதிகாரம் உட்பட உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்படும் சட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டவை.

### Local government

Local governments are the administrative authorities of an area smaller than a state or constituent unit of a federation (such as a village town, city, county, district or region), and thus refers to a level of sub-national government. However, local government authorities are subordinate to the central government, and are therefore different from state governments in a federal system. The powers that local government bodies possess, which include limited taxation powers, are limited by laws that are passed at the national level.

## 70

### ප්‍රාදේශීය ස්වයං පාලනය

රාජ්‍යයක් හෝ ෆෙඩරේශනයක සංයුක්ත ඒකකයකට වඩා කුඩා (ගමක්, නගරයක්, විශාල නගරයක්, කෝරළයක්, දිස්ත්‍රික්කයක් හෝ කලාපයක් වැනි) ප්‍රදේශයක පරිපාලනයයි. මෙකී පරිපාලනය සිදු කරනු ලබන්නේ ප්‍රාදේශීය පදිංචිකරුවන් නියෝජනය කරන කණ්ඩායමක් විසින් වන අතර සෑහෙන තරම් විශාල ප්‍රමාණයක ස්වයංපාලනයක් දරමින්, අඩුම වශයෙන් එහි ආදායමෙන් කොටසක් හෝ ප්‍රාදේශීය බදු අය කිරීම් මගින් ලබාගනිමින් සහ තම ඉපැයීම් සේවාවන් සැපයීම සඳහා වැය කරමින් ප්‍රාදේශීය ස්වයං පාලනය සිදු කෙරේ.

### உள்ளூர் சுய ஆட்சி

அரசு, மாநில அரசு என்பனவற்றிலும் சிறியதான ஆட்சி அலகை இது குறிக்கும் (கிராமம், சிறுநகரம், நகரம், மாவட்டம் பிராந்தியம் என்பன) இவ்வாட்சிப் பகுதியின் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாயும், குறிப்பிடத்தக்க அளவு தன்னாட்சி அதிகாரங்களுடன் சுதந்திரமாக செயற்படும் உள்ளூராட்சி அலகை இச் சொல் குறிப்பிடுகிறது. தனது வருமானத்தின் ஒரு பகுதியை உள்ளூர் மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணத்தில் இருந்து பெற்றுக் கொள்வதாயும் மக்களுக்கான பல சேவைகளை வழங்குவதாயும் இவ்வாட்சி அலகு இருக்கும்.

### Local self-government

The administration of an area smaller than the state or constituent unit of a federation (such as a village town, city, county, district or region) by the body representing the local inhabitants, possessing a fairly large amount of autonomy, raising at least a part of its revenue through local taxation and spending the proceeds on services.

**71**

## ප්‍රධාන මධ්‍යගතකරණය

ෆෙඩරල් ක්‍රමයක් තුළ ප්‍රධාන මධ්‍යගතකරණය යනුවෙන් හැඳින්වෙන්නේ සැලකිය යුතු තරම් විශාල මට්ටමක ව්‍යවස්ථාදායක විධායක බලතල සංයුක්ත ඒකකයක්, ප්‍රාන්තයක් හෝ ප්‍රාන්ත රාජ්‍යයක් වෙතින් මධ්‍යම රජයට පවරනු ලැබීමේ ක්‍රියාදාමයයි. මෙසේ පැවරීමේ අරමුණ වන්නේ විවිධාකාර ක්ෂේත්‍රයන්හි ක්‍රියාකාරිත්වයන් සඳහා වන මධ්‍යම රජයේ හැකියාව ඉහළ නැංවීමයි.

## சமஷ்டியில் அதிகார மத்தியப்படுத்தல்

சமஷ்டி அரசியல் முறையொன்றில் மத்திய அரசு தனது அதிகாரங்களை பெருக்கிக் கொள்வதை இது குறிப்பிடும். சட்ட ஆக்கம், நிர்வாகம் ஆகிய இரு துறைகளிலும் மாநில அரசுகளிற்கு இருந்த அதிகாரங்கள் மத்திய அரசு நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டு மத்திய அரசு பல்துறைச் செயற்பாடுகளை இம்முறை மூலம் விரிவாக்கிக் கொள்ளும்.

## MAJOR CENTRALISATION

In a federal system, major centralisation refers to the process by which substantial legislative and executive powers are transferred from the constituent units (provinces or states) to the central government in order to increase its capacity and control in various fields of activities.

**72**

## ප්‍රධාන විමධ්‍යගතකරණය

ෆෙඩරල් ක්‍රමයක් තුළ ප්‍රධාන විමධ්‍යගතකරණය යනුවෙන් හැඳින්වෙන්නේ සැලකිය යුතු තරම් විශාල මට්ටමක ව්‍යවස්ථාදායක හා විධායක බලතල සහ මූල්‍ය සම්පත් මධ්‍යම රජයේ සිට සංයුක්ත ඒකකයන් වෙත පැවරීමේ ක්‍රියාදාමයයි. මෙහි අරමුණ නම් එම සංයුක්ත ඒකකයන් හට විවිධාකාර ක්ෂේත්‍රයන්හි ක්‍රියාකාරිත්වයන් සඳහා අවශ්‍ය ස්වයං පාලන හැකියාව වැඩිදියුණු කිරීමයි. මධ්‍යම රජයට අවශෝෂණයඃ reservation), ඉඩ නොදීම සහ සංයුක්ත ඒකකයන්ට වෙන්කොට ඇති කාර්ය ක්ෂේත්‍රයන් හදිසි අවස්ථා බලතල පාවිච්චි කොට ආක්‍රමණය කිරීමට ඇති හැකියාවට සීමාවන් පැනවීම ද මෙම ක්‍රියාදාමය හා සම්බන්ධ උපක්‍රමයන් වේ.

## சமஷ்டியில் அதிகாரப் பரவலாக்கம்

சட்ட ஆக்கம், நிர்வாகம் தொடர்பான அதிகாரங்களை ஒரு சமஷ்டி அமைப்பின் மாநில அரசுகளுக்கு பரவலாக்கம் செய்வதை இது குறிக்கும். நிதி வளங்களும் மாநில அரசுகளுக்கு கூடிய அளவில் வழங்கப்படும். இவ்வித அதிகாரப் பரவலாக்கம் மாநில அரச நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளில் தன்னாட்சி அதிகாரமுடையனவாய் செயற்படுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். இட ஒதுக்கீடு, அவசரகால அதிகாரங்கள் என்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி மாநில அரசுகளை மத்திய அரசு கட்டுப்படுத்தல், மாநில அரசுகளின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட அலுவல்களில் மத்திய அரசு தலையிடுதல் என்பனவும் இதன் மூலம் நீக்கப்படும்.

## MAJOR DECENTRALISATION

In a federal system, major decentralisation refers to the process by which substantial legislative and executive powers and financial resources are transferred from the central government to the constituent units in order to increase their autonomy in different fields of activities. The process also involves restrictions on the ability of the central government to use devices such as reservation, disallowance and emergency powers to invade the areas of jurisdiction reserved to the constituent units.

## 73

## බහුතරවාදය

සමස්තයක් ලෙස මුළු සමාජයටම බලපාන තිරණ ගැනීම ජනතාවගෙන් බහුතරයක් විසින් ඡන්ද විමසීමක දී ප්‍රකාශ වන පරිදි සිදුවිය යුතුය යන්න අවධාරණය කරන දේශපාලන දර්ශනයකි බහුතරවාදය. බහුජාතීය රාජ්‍යයක දී බහුතරවාදය විසින් සංඛ්‍යාත්මකව බලවත් ජාතික කණ්ඩායම වෙත අනෙකුත් කණ්ඩායම් වල අවශ්‍යතාවන් නොතකා හැරීමේ හැකියාව ලබාදේ. ඇතැම් විට 'බහුතරයේ හිතුවක්කාරකම' ලෙස හඳුන්වනු ලබන මෙය පාලනය කරනු ලබන එක් ආකාරයක් නම් මානව හිමිකම් සහ නිදහසවල් ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව තුළ ආරක්ෂණය කිරීමයි. බහුතරවාදය බොහෝවිට බහුතරයේ පාලනය ලෙස හැඳින්වේ.

## பெரும்பான்மை

அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பெரும்பான்மைக் கருத்துக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை வழியுறுத்தும் அரசியல் தத்துவம் பெரும்பான்மை வாதம் எனப்படும். பல்தேசிய அரசு ஒன்றில் சனத்தொகையில் பெரும்பான்மையினரான தேசிய இனக்குழு ஏனைய சிறுபான்மையினரான தேசிய இனக்குழுக்களின் தேவைகளையும் நலன்களையும் புறந்தள்ளுவதற்கு பெரும்பான்மை வாதம் துணை செய்கிறது. இவ்விதமான "பெரும்பான்மை வல்லாட்சியை (tyranny of the majority) கட்டுப்படுத்துவதற்குரிய ஒரு வழி அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்வதாகும். பெரும்பான்மைவாதம் என்ற சொல் பெரும்பான்மை ஆட்சி என்ற கருத்திலும் உபயோகிக்கப்படும்.

## MAJORITARIANISM

Majoritarianism is a political philosophy which asserts that decisions affecting society as a whole should be taken by the majority of people as expressed in a voting poll. In a multinational state, majoritarianism often allows the numerically dominant national group to ignore the needs of the other groups. One way of controlling what is sometimes called the 'tyranny of the majority' is the constitutional entrenchment of fundamental rights and freedoms. Majoritarianism is often referred to as majority rule.

## 74

## බහුතර ජන කොටස

දෙන ලද භූමියක සමස්ත ජනගහනයෙන් එක් භාගයකට වඩා සමන්විත වන ජන කොටස බහුතර ජන කොටස ලෙස හැඳින්වේ.

## பெரும்பான்மைச் சமூகம்

ஒரு குறிப்பிட்ட எல்லைப் பரப்பில் வாழும் மக்கள் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கையினராக உள்ள மக்கள் குழுவினர் பெரும்பான்மைச் சமூகம் என அழைக்கப்படுவர்.

## MAJORITY COMMUNITY

The majority community is the group constituting more than one-half of the total population within a given territory.

## 75

## රජය වෙත අර්ථාන්විත ප්‍රවේශය

සමානාත්මතා හේතු මත, රජයේ ආයතනයන් වෙත තමන්ගේ වැඩසටහන් හා සේවාවන් වෙත ''අර්ථාන්විත ප්‍රවේශයක්'' සහතික කිරීමේ නෛතික යුතුකමක් පවරනු ලැබ ඇත. මෙම යුතුකමෙන් අදහස් වන්නේ ආබාධිත තත්ත්වයන් හෝ සීමාවන් සහිත පුද්ගලයන්ගේ විශේෂ අවශ්‍යතා (රාජ්‍ය භාෂාවෙන් ඵලදායක ලෙස සන්නිවේදනයෙහි යෙදීමේ වැනි) සැලකිල්ලට ගෙන රජයේ වැඩසටහන් සේවාවන් සහ ක්‍රියාකාරකම් වර්ධනය කළ යුතු බවයි. මෙනයින් බලන කල අර්ථාන්විත ප්‍රවේශය මගින් රජයේ ආයතනයන්ට සහභාගී වීම සහ ඵලදායක ලෙස ප්‍රවේශ වීම, ශාරීරික ආබාධ සහිත බව, භාෂාව හෝ සංස්කෘතික පසුබිම නොසලකා සියලු පුද්ගලයන්ට සහතික කිරීම සඳහා සියලු උචිත පියවරයන් ගැනීමට සාධනීය යුතුකමක් (වෙනස්කම් කිරීමෙන් වැලකීම, වැනි නිශේධක යුතුකමකට වෙනස්ව) පවරනු ලබයි. මෙම යුතුකම රජයේ මූල්‍ය පහසුකම් ලබන පුද්ගලික ඒජන්සි සහ ආයතනවලට ද බොහෝවිට පවරනු ලැබේ. සංස්කෘතික සුළුතර කණ්ඩායම් විසින් මෙම සංකල්පය රජයේ ආයතනයන්ට එරෙහිව කැඳවනු ලබන්නේ ඔවුන්ගේ ඵලදායක සහභාගිත්වයට ඇති සංස්කෘතික බාධකයන් අහෝසි කරගැනීම සඳහා ය.

## அர்த்தமிகு பெறுவழி

அரசாங்க நிறுவனங்கள் தமது செயல்திட்டங்களையும் சேவைகளையும் மக்களுக்கு கிடைக்கச் செய்யும் முறையில் வடிவமைக்க வேண்டும். மக்கள் தடையின்றியும் இலகுவாகவும் அவற்றின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழி இருத்தல் வேண்டும். இதனைப் பெறுவழி (Access) எனக் கூறுவர். இப்பெறுவழி அர்த்தமுடையதாக நடைமுறைச் சாத்தியமுடையதாக இருத்தல் "அர்த்தமிகு பெறுவழி" என்பதால் உணர்த்தப்படுகிறது. அரசாங்க நிறுவனங்களின் மீது சுமத்தப்படும் சட்டக் கடப்பாடாக "அர்த்தமிகு பெறுவழி" என்னும் கருத்து உள்ளது. தனிநபர்களின் சிறப்புத் தேவைகளையும், அவர்களுக்கு இருக்கக்கூடிய இயலாமைகளையும் கருத்தில் கொண்டு திட்டங்களின் பயன்கள் கிடைக்கக் கூடிய அர்த்தமிகு பெறுவழிகள் உருவாக்கப்பட வேண்டும். அரசகரும மொழியில் தொடர்பாட முடியாதவர்களுக்கு தொடர்பாடலுக்கு அர்த்தமிகு பெறுவழியை உண்டாக்கும் கடப்பாட்டை ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம். பாரபட்சம் காட்டாதிருத்தல் (Non - discrimination) எதிர்மறையான கடப்பாடாகும். இதனோடு ஒப்பிடுகையில் அர்த்தமிகு பெறுவழி ஓர் நேர்முறைக் கடப்பாடு ஆகும். தனிநபர்கள் உடல் ஊனம் உடையவர்களாய் இருக்கலாம். பேசும் மொழியால் வேறுபட்டவராய் இருக்கலாம். வேறுபட்ட பண்பாட்டை உடையவராய் இருக்கலாம். இந்த வேற்றுமைகள் தனிநபர்கள் அரசின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தடையாக இருக்கக் கூடாது. அரசாங்க நிதிகளைப் பெற்றுக் கொள்ளும் தனியார் துறை நிறுவனங்கள் மீதும் அர்த்தமிகு பெறுவழிக் கடப்பாடு சுமத்தப்படும். உடல் ஊனமுற்றோர் தொடர்பான சட்டத்தில் அர்த்தமிகு பெறுவழி பிரதான எண்ணக்கருவாக உள்ளது. அரசாங்க நிறுவனங்களின் செயல்திட்டங்களில் சிறுபான்மைப் பண்பாட்டுக் குழுக்கள் பங்கேற்பதற்குள்ள தடைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைக்கு இக்கருத்து உதவுகிறது.

## MEANINGFUL ACCESS (TO GOVERNMENT)

On equality grounds, government institutions are often imposed a legal obligation to guarantee 'meaningful access' to their programmes and services. This obligation means that governmental programmes, services and activities should be developed taking into account the particular needs of individuals with disabilities or limitations (like in communicating effectively in the official language). Meaningful access thus imposes a positive obligation (as opposed to a negative obligation of non-discrimination) to take all the appropriate measures to ensure that all individuals, regardless of physical disability, language, or cultural background can effectively access and participate in government institutions. The obligation is often imposed on private agencies and institutions receiving governmental funding.
Cultural minorities often invoke the concept against governmental agencies so to have cultural barriers to their effective participation eliminated.

## 76

### සුළුතර ප්‍රජාව / සුළුතර ජාතිය

සුළුතර ජාතියක්, යනු දෙන ලද භූමියක වාසය කරන ජනගහනයෙන් බහුතරයක් හෝ බහුත්වයක් නොවන්නා වූ උප කණ්ඩායමකි. කෙසේ නමුත් සුළුතර කණ්ඩායම යන්නෙහි අර්ථකථනය සංධර්භය මත පදනම්ව වෙනස් වේ. එය ඇතැම් විට අවශ්‍යයෙන් ම සංඛ්‍යාත්මක සුළුතරයක් නොවන්නා වූ එනමුත් සමාජ තත්ත්වය, අධ්‍යාපනය, රැකියාව, ධනය සහ දේශපාලන බලය යනාදිය කරණකොටගෙන ප්‍රබල වූ කණ්ඩායමකට සාපේක්ෂව අව වරප්‍රසාදිත වන කණ්ඩායමක් හැඳින්වීමට ද භාවිත වේ.

### சிறுபான்மைச் சமூகம்

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் சனத்தொகையில் சிறுபான்மையினராக இருக்கும் பிரிவு மக்கள் குழுவைச் சிறுபான்மைச் சமூகம் என்பர். இச் சொற் தொடரின் கருத்து இடத்துக்கிடம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபடலாம். சனத்தொகை எண்ணிக்கையின்படி சிறுபான்மைச் சமூகம் என்று கூறமுடியாவிடினும் சமூக அந்தஸ்து, கல்வி, வேலைவாய்ப்பு, சொத்து, அரசியல் அதிகாரம் ஆகிய விடயங்களில் ஆதிக்கக் குழுக்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பிற்பட்ட சமூகங்களை சிறுபான்மைச் சமூகங்கள் என்று கூறுவதுண்டு.

### Minority community

A minority community is a sub-group of the population living on a given territory that does not form either a majority or a plurality. The definition of a minority group however varies depending on the context. It is sometimes used to refer to a group that, while not necessarily constituting a numerical minority, is disadvantaged in relation to a dominant group in terms of social status, education, employment, wealth and political power.

## 77

### රාජාණ්ඩුව

රාජාණ්ඩුවක් යනු රජෙක්, සාමාන්‍යයෙන් තනි පුද්ගලයෙක්, රාජ්‍ය නායකයා වන ආණ්ඩු ක්‍රමයකී බොහෝ රාජාණ්ඩුවල රජතුමා / රැජින, ඔහුගේ / ඇයගේ සම්පූර්ණ ජීවිත කාලය පුරාම ස්වකීය රජ තනතුර දරයි. රාජකීය හෝ අධිරාජ්‍ය පැළැන්තිය නිර්මාණය කරන ආයතනයන් සහ පුද්ගලයන් (විශේෂයෙන්ම රජ පෙළපත) හා රජ කෙනෙකු විසින් රජ කරන

### முடியாட்சி

முடியாட்சி அரசியல் முறையில் தனிநபர் ஒருவர் (அரசி/அரசன்) நாட்டின் அரசாங்கத் தலைவராக இருப்பார். பெரும்பாலான நாடுகளில் முடிதரிக்கும் அரசி/மன்னர் தம் வாழ்நாள் முழுவதும் ஆட்சியாளராக இருப்பார். இந்த ஆங்கிலச் சொல்லுக்கு இன்னொரு அர்த்தமும் உண்டு. இராச குடும்பம், அதனோடு இணைந்த நிறுவனக் கட்டமைப்புக்கள் யாவற்றையும் சேர்த்து குறிப்பிடுவதற்கும் ஆங்கிலச் சொல் உபயோகிக்கப்படும்.

### Monarchy

A monarchy is a form of government in which a monarch, usually a single person, is the head of state. In most monarchies, the monarchs hold his/her position for life. The term monarchy is also used to refer to the people (especially the dynasty, also known as royalty) and institutions that make up the royal or imperial establishment,

රාජධානිය හැඳින්වීමට ද රාජාණ්ඩුව යන්න භාවිත වේ.

රාජාණ්ඩු දෙවර්ගයක් වෙයි. පූර්ණ රාජාණ්ඩුවක (උදා: සවුදි අරාබිය) රජුගේ බලයට කිසිදු නෛතික සීමාවක් නොමැතිව රාජාණ්ඩු ක්‍රම ක්‍රියාත්මක වේ. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය රාජාණ්ඩුවක රජුගේ හෝ රැජිනගේ බලතල ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවක් මගින් සීමාවන අතර, බලතල භාවිත කරනු ලබන්නේ පාලන ආයතනයක් ද සමග ය. (උදා: පාර්ලිමේන්තුව) සාමාන්‍යයෙන් නූතන ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාමය රාජාණ්ඩු විසින් බලතල විභේදනය පිළිබඳ සංකල්පය ක්‍රියාවට නගනු ලබන අතර රජු එක්කෝ විධායක ශාඛාවේ නායකයා වේ. නැත්නම් චාරිත්‍රානුකූල හෝ සංකේතාත්මක භූමිකාවක් දරයි.

இருவகை முடியாட்சிகள் உள்ளன. சர்வ அதிகாரம் உள்ள முடியாட்சிகள் ஒருவகையின் (சவூதி அரேபியா, பூட்டான்) இவ்வகை ஆட்சிகளில் அரசுத்தலைவருக்கு (அரசி/அரசன்) வரம்பற்ற அதிகாரங்கள் உள்ளன. அரசியல் யாப்பின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட முடியாட்சி இன்னொரு வகை. இதனை வரம்புக்கு உட்பட்ட முடியாட்சி என்று கூறலாம். அரசியல் யாப்பினால் அரசி /அரசன் அதிகாரங்கள் வரையறை செய்யப்படுவதோடு ஆட்சி அதிகாரம் உடைய பாராளுமன்றம் என்ற அமைப்புடன் இணைந்து முடிவு செயற்படும் வகையில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இக்கால வரம்புக்குட்பட்ட முடியாட்சிகளில் அதிகார வேறாக்கம் (Separation of powers) என்னும் கருத்தும் உட்படுத்தப்பட்டுள்ளது. அரசி/ அரசன் நிர்வாகத்துறையின் தலைவராக இருப்பார். அல்லது சம்பிரதாயபூர்வமான கடமைகளைக் கொண்ட பெயரளவிலான குறியீட்டு வடிவிலான தலைமை வழங்கப்பட்டிருக்கும்.

or to the realm over which the monarch reigns.

There are two types of monarchies. In an absolute monarchy (e.g., Saudi Arabia), the monarch rules / reigns with no legal limits to his powers. In a constitutional monarchy, the powers of the king or queen are limited by a constitution and are exercised along with those of a governing body (i.e. Parliament). Modern constitutional monarchies usually implement the concept of separation of powers, where the monarch either is the head of the executive branch or simply has a ceremonial or symbolic role.

**78**

## බහුජාතික රාජ්‍යය

## பல்தேசிய அரசு இனக்குழுமம்

## MULTINATIONAL STATE (OR MULTINATION STATE)

බහුජාතික රාජ්‍යයක් (රටක්) යනු ජනගහනය ජනවාර්ගික ලෙස ජාතීන් දෙකක් හෝ වැඩි ගණනකින් සමන්විත වන රාජ්‍යයකි. මීට වෙනස් ලෙස ජාතික - රාජ්‍ය යනු එක් ජාතියකින් සමන්විත රටකි.

பல்தேசிய அரசு இனக்குழுமம் என்பது முறையில் வேறுபட்டனவான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய இனங்களைக் கொண்ட நாடாகும். தேசிய அரசு (Nation State) என்ற சொல் ஒரு தேசிய இனத்தை மட்டும் கொண்ட அரசைக் (நாட்டை) குறிப்பிடும் இந்த ஒப்பீடு பல்தேசிய அரசு என்ற சொல்லின் கருத்தை விளக்க உதவுகிறது.

A multinational state is a state (country) in which the population consists of two or more ethnically distinct nations. In contrast, a nation-state is a country consisting of a single nation.

## 79

### ජාතිය

ජාතියක් යනු පොදු පරම්පරාවක්, ඉතිහාසයක්, භාෂාවක් හා සංස්කෘතියක් ඇතැයි සැලකෙන නිශ්චිත භූමියක ජීවත්වන කණ්ඩායමකි. මෙම භූමිය රාජ්‍යයක භෞමික සීමාව හා සමපාත වීම අවශ්‍යම නොවේ. කෙසේ නමුත් ජාතිය යන වචනය නිතරම භාවිත වන්නේ එක් රාජ්‍යයක ජීවත් වන හා ඊට අයත්වන ජනතාවක් හැඳින්වීම සඳහා යි ජාතික රාජ්‍යය යන යෙදුම වඩා උචිත වේ.

### தேசிய இனம்

பொதுவான மூதாதையர், பொதுவான வரலாறு, மொழி அல்லது பண்பாடு என்பனவற்றைக் கொண்ட மக்கள் சமூகம் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட எல்லையுடைய புவியியல் பிரதேசத்தில் வாழ்பவர்களாகவும் இருக்கும் போது அச்சமூகத்தினர் தேசிய இனம் என்று அழைக்கப்படுவர். அச்சமூகத்தின் வாழ்விடமான பிரதேசமும் அரசின் ஆள்புல எல்லையும் ஒன்றாக அமைய வேண்டிய கட்டாயம் இல்லை. தேசிய – அரசு (Nation - state) என்ற சொல் அரசு ஒன்றின் ஆள்புல எல்லை தேசிய இனம் ஒன்றின் வாழிடப் பிரதேசத்துடன் ஒன்றுபடுமிடத்து மிகப் பொருத்தமானதாகும். இருந்த போதும் Nation என்ற ஆங்கிலச் சொல்லை "அரசு" (நாடு) என்ற கருத்தில் ஆங்கிலத்தில் உபயோகிக்கப்படுவதுண்டு. "தேசிய இனம்" என்று தமிழில் கூறும் போது இக்குழப்பம் நீக்கப்படுகிறது.

### NATION

A group of people of presumed common descent, history, language or culture, living on a defined territory not necessarily coinciding with the territorial limits of a state. However, the word nation is often used to refer to the people living in and belonging to a single state. The expression 'nation-state' is more appropriate.

## 80

### ජාතික ප්‍රජාව

ජාතියක් නිර්මාණය කරන ජන කණ්ඩායම හැඳින්වීමට ජාතික ප්‍රජාව යන යෙදුම භාවිත වේ. මෙම යෙදුම රාජ්‍යයක ජනගහනය හැඳින්වීමට ද යොදනු ලැබේ.

### தேசியச் சமூகம்

ஒரு தேசிய இனத்தின் அங்கமாக அமையும் மக்கள் குழுமத்தை தேசியச் சமூகம் என்பர். அரசு ஒன்றின் கீழ் வாழும் மக்களையும் குறிப்பதற்கு இத் தொடர் உபயோகிக்கப்படுகிறது.

### NATIONAL COMMUNITY

The national community refers to the group of people forming a nation. It can also designate the population of a state.

## 81

### ජාතිකත්වය

ජාතිකත්වය යනු රටක් සහ පුද්ගලයකු අතර පවතින නෛතික සම්බන්ධතාවයි. ජාතිකත්වය විසින් පුද්ගලයා කෙරෙහි වන නෛතික බල අධිකාරය (රාජ්‍යයක් විසින් පුද්ගලයෙකු කෙරෙහි වන නෛතික බල අධිකාරිය අත්කරගන්නා එකම ආකාරය මෙම ජාතිකත්වය නොවුනද) රාජ්‍යය වෙත පවරන අතර පුද්ගලයාට රාජ්‍යයේ ආරක්‍ෂාව ලබාදෙයි. ජාතිකත්වය යන වචනයේ නෛතික අර්ථයෙන් බොහෝවිට පුරවැසිභාවය අදහස් වේ.

### நாட்டுரிமைப் பண்பு

ஒரு நாட்டிற்கும் அந்நாட்டில் வாழும் நபர் ஒருவரிற்கும் உள்ள சட்ட வழித் தொடர்பைக் குறிப்பதாக இச்சொல் அரசியல் விஞ்ஞானத்தில் உபயோகிக்கப்படும். நாட்டின் வாழ்வு ஒரு நபரை அரசின் நியாயாதிக்க எல்லைக்குள் உட்படுத்துவதோடு அவருக்கு அரசின் பாதுகாப்பையும் வழங்கும். இவ்வகையான சட்டக் கருத்தில் இச்சொல் உபயோகிக்க்பபடும் போது அது பிரஜா உரிமை என்ற பொருளையே தருகிறது.

### NATIONALITY

Nationality is the legal relationship between a person and a country. Nationality gives the state jurisdiction over the person (though this nationality is not the only way for a state to acquire jurisdiction over a person) and affords the person the protection of the state. The legal sense of the word may often mean citizenship.

## 82

### ජාතික භාවය

ජාතියක් වීම පිළිබඳ තත්ත්වය.

### தேசிய இனம்

தேசிய இனம் என்ற தகுதியையுடையதாய் இருக்கும் தன்மை அல்லது அந்நிலையை அடைந்து விட்டமையைக் குறிப்பிடும் சொல்.

### NATIONHOOD

The state of being a nation.

## 83

### කතිපයාධිපත්‍යය

කතිපයාධිපත්‍යය නම් දේශපාලන බලය ප්‍රායෝගික වශයෙන් ගත් කල ධනය, පවුල්බලය හෝ යුධ බලයට ඇති හිමිකම මගින් සුවිශේෂී වන ඉහළ පැලැන්තියේ කුඩා සමාජ කොටසක් අත රැඳී පවතින ආණ්ඩු ක්‍රමයකි.

### சிலராட்சி

ஒரு நாட்டின் அரசியல் அதிகாரம் சமூகத்தில் மேலோர்களாக உள்ள ஒரு சிறு குழுவினரின் கையில் இருக்கும் போது அந்நாட்டில் சிலராட்சி நிலவும் என்று கூறலாம். ஆட்சியில் இருக்கும் சிறிய மேலோர் குழு பணபலம் உடையவராய் இருத்தல், குடும்ப ஆதிக்கம் அல்லது இராணுவபலம் காரணமாக ஆட்சியதிகாரம் பெற்றவர்களாய் இருப்பர்.

### OLIGARCHY

Oligarchy is a form of government where political power effectively rests with a small, elite segment of society (whether distinguished by wealth, family or military prowess).

**84**

## අධිනියෝජනය

දෙන ලද වර්ගයක් තුළ යම් කණ්ඩායමකින් නියෝජනය වන පුද්ගලයන් සංඛ්‍යාව එම වර්ගය තුළ සමස්ත පුද්ගල සංඛ්‍යාවෙන් දරන ප්‍රතිශතය සමස්ත ජනගහනය තුළ එම කණ්ඩායම දරණ ප්‍රතිශතයට වඩා වැඩි වූ විට එය අධිනියොජනයක් වේ. උදාහරණයක් ලෙස බොහෝ රටවල සිවිල් සේවය තුළ පිරිමින්ගේ අධිනියෝජනයක් සිදු වේ. කවර හෙයින් ද යත් පිරිමි සිවිල් සේවකයන්ගේ ප්‍රතිශතය 50%ට වඩා වැඩිවන නිසා ය.

## மிகைப் பிரதிநிதித்துவம்

ஒரு குறிப்பிட்ட குழுவினரின் பிரதிநிதித்துவம் அக்குழுவினர் மொத்தச் சனத்தொகையில் கொண்டிருக்கும் விகிதாசாரத்திற்கு மேற்பட்டதாக இருக்கும் போது அதனை மிகைப் பிரதிநிதித்துவம் என்பர். உதாரணமாக பெரும்பாலான நாடுகளின் சிவில் சேவையில் பெண்களோடு ஒப்பிடும் போது ஆண்கள் மிகைப் பிரதிநிதித்துவம் கொண்டுள்ளனர்.

## OVER-REPRESENTATION

Over-representation occurs where there is representation in disproportionately high numbers of a group when compared to the numbers of that group in the general population. For example, men are over-represented in the civil service of many countries as the proportion of male civil servants is more than 50%.

**85**

## පාර්ලිමේන්තු ආණ්ඩුව

පාර්ලිමේන්තු ආණ්ඩුවක් යනු ව්‍යවස්ථාදායකයේ තේරී පත් වූ නියෝජිත සභාවට විධායකය වගකිවයුතු වන්නා වූ ආණ්ඩු ක්‍රමයකි. එයින් අදහස් වන්නේ විධායකය ඍජුවම (විශ්වාසය පළ කිරීමේ යෝජනාවක දී) හෝ වක්‍ර ලෙස (යෝජනා කරනු ලැබූ නීතිකරණයන් පරාජය වීම මගින්) සභාවේ සහයෝගය නොලැබ පැරදුන හොත් එය බලයෙන් ඉවත්විය යුතු බවයි. පාර්ලිමේන්තු ක්‍රමයක දී විධායකයේ සාමාජිකයන් (ඇමතිවරු) ව්‍යවස්ථාදායකයේ (බහුතර පක්ෂයේ) සාමාජිකයන් අතරින් තෝරාගනු ලබන අතර එහෙයින් ම ජනාධිපති ජනරජයක් හා සැසඳූ කල පැහැදිලි බලතල විභේදනයක් දක්නට නොලැබේ.

## பாராளுமன்ற முறை அரசாங்கம்

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு பொறுப்புச் சொல்லும் கடப்பாடு உடையதான நிர்வாகத்துறையைக் கொண்ட அரசாங்க முறையை பாராளுமன்ற முறை அரசாங்கம் என்பர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால் அல்லது சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுவதற்கான பெரும்பான்மை வாக்குகள் இன்றித் தோற்கடிக்கப்பட்டால் நிர்வாகத்துறை பதவியில் இருந்து விலக வேண்டும் என்பது இதன் பொருள். பாராளுமன்ற நிர்வாக முறையில் மந்திரி சபையில் அங்கம் வகிப்போர் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் (பெரும்பான்மைப் பலம் உள்ள கட்சியின்) இருப்பர். இதனால் நிர்வாகத்திற்கும் சட்ட ஆக்கத்துறைக்கும் இடையிலான தெளிவான அதிகார வேறாக்கம் பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் இருப்பது இல்லை. ஜனாதிபதி முறையில் அதிகார வேறாக்கம் தெளிவாக இருக்கும். பாராளுமன்ற

## PARLIAMENTARY GOVERNMENT

Parliamentary government is a system of government where the executive is accountable to the legislature. It means that the executive must leave office if it loses directly (through a vote of confidence) or indirectly (though proposed legislation being defeated) the support of the house. In a parliamentary system, members of the executive (ministers) are drawn from the membership of the legislature (the majority party), so there is no clear separation of powers comparable to those found in a presidential system. Further, in a parliamentary system,

වැඩිදුරටත් පාර්ලිමේන්තු ආණ්ඩු ක්‍රමයක දී ආණ්ඩුවේ නායකයා හා රාජ්‍ය නායකයා වෙනස් පුද්ගලයන් දෙදෙනෙකි. ආණ්ඩුවේ නායකයා අගමැතිවරයා වන අතර රාජ්‍ය නායකයා තේරී පත් වූ (ජනතා ඡන්දයෙන් හෝ පාර්ලිමේන්තුවේ ඡන්දයෙන්) ජනාධිපතිවරයා හෝ පාරම්පරික උරුමයෙන් පත් වූ රජෙකි.

நிர்வாக முறையில் அரசுத் தலைவர் (Head of State) வேறாகவும் அரசாங்கத்தின் தலைவர் (Head of Government) வேறாகவும் இருப்பார்கள். அரசாங்கத்தின் தலைவராக பிரதம மந்திரி இருப்பார். அரசின் தலைவராக ஜனாதிபதியோ அல்லது பரம்பரை வழி ஆட்சியுரிமையுடைய அரசி/அரசன் இருப்பார் (ஜனாதிபதியாயின் அவர் தேர்தல் மூலம் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவராகவோ அல்லது பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டவராகவோ இருப்பார்).

the head of government and the head of state are two different persons, with the head of government being the prime minister or premier, and the head of state often being an elected (either popularly or through parliament) president or hereditary monarch.

**86**

## ජනාධිපති ආණ්ඩුව

ජනාධිපති ආණ්ඩු ක්‍රමයකදී විධායකය (ජනාධිපති නම් වූ පුද්ගලයා ලෙස) සෘජුවම, ජනතාව විසින්, නිශ්චිත කාල පරිච්ඡේදයක් සිදහා, තෝරා පත්කරගනු ලබන අතර එහි බලතල වල ප්‍රභවය ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව වේ. විධායකය ව්‍යවස්ථාදායකයට නොව ජනතාවට වගකිව යුතු වේ. ඔහු ඉවත් කළ හැක්කේ දෝෂාභියෝගය නම් වූ නෛතික ක්‍රියාදාමය තුළින් පමණකි. මෙසේ ගත් කල ජනාධිපති ආණ්ඩුක්‍රමය බලතල විභේදනයේ මූලධර්මය අන්තර්ගත වූවකි. මෙම ඓන්ද්‍රීය බලතල විභේදනයට අමතරව කාර්යබද්ධ බලතල විභේදනයක් ද එහි අන්තර්ගත වේ උදා: ජනාධිපතිවරයාට සෘජුවම ව්‍යවස්ථා සම්පාදනයේ යෙදීමට හෝ යෝජිත පනත් ඉදිරිපත් කිරීමට නොහැකි වේ.

## ஜனாதிபதி முறை அரசாங்கம்

ஜனாதிபதி முறை அரசாங்கம் அதிகார வேறாக்கம் என்ற கருத்தின் அடிப்படையில் அமைவதாகும். நாட்டின் நிர்வாகி ஜனாதிபதி என்ற தனிநபராக இருப்பார். அவர் நேரடியாக மக்களுக்குப் பொறுப்பு சொல்ல வேண்டியவராக இருப்பார். பாராளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவரல்லர். அரசியல் குற்றச்சாட்டு (Impeachment) என்னும் சட்ட நடைமுறை மூலம் மட்டுமே அவரைப் பதவியில் இருந்து அகற்றலாம். ஜனாதிபதி குறிப்பிட்ட பதவிக்காலத்திற்கு பதவி வகிப்பார். அவரது அதிகாரங்கள் அரசியல் யாப்பில் இருந்து பெறப்பட்டனவாக இருக்கும். ஜனாதிபதிக்கு நேரடியாக சட்டங்களை இயற்றும் அதிகாரம் இல்லை. அவர் ஒரு சட்ட மூலத்தை முன்மொழிதலும் இயலாது. அமெரிக்காவில் உள்ளது போன்ற ஜனாதிபதி முறை நாடுகளில் ஜனாதிபதிக்கு சட்டசபையினால் இயற்றப்படும் சட்டங்களைத் தடுக்கும் 'வீட்டோ' அதிகாரம் உள்ளது. அத்தோடு இந்த 'வீட்டோ' அதிகாரத்தை அதிபெரும்பான்மைப் பலத்தின் மூலம் மீறும் அதிகாரம் சட்டசபைக்கும் இருக்கும். நிர்வாகத்துறையின் ஏனைய பதவிகளுக்கு ஜனாதிபதியே நியமனங்களைச் செய்வார். இவ்விதம் நியமனம் பெறும் அமைச்சர்களும் சட்டசபையின் உறுப்பினர்களாக இருப்பதில்லை. ஜனாதிபதியிடமிருந்தே அவரது நியமன வழி அதிகாரத்தை இந்நிர்வாகிகள் பெறுவர்.

## Presidential Government

In a presidential system of government, the executive (in the individual person of the President) is elected directly by citizens for a fixed period of time and the source of its powers is the Constitution. The executive is accountable to the public, not the legislature, and can only be brought down through the legal process of impeachment. Thus a presidential government is a system of government characterised by the principle of the separation of powers. In addition to this organic separation of powers, there is also functional separation of powers, e.g. the president may not have the ability to legislate directly or introduce bills.

**87**

## පාර්ලිමේන්තුවේ ස්වෛරීභාවය (පරමාධිපත්‍යය)

පාර්ලිමේන්තුවේ ස්වෛරීභාවය පිළිබඳ සංකල්පයෙන් අදහස් වන්නේ රටක උත්තරීතර නීත්‍යනුකූල බලාධිකාරය පාර්ලිමේන්තුව (හෝ ව්‍යවස්ථාදායකය) වන බවයි. එයින් ගම්‍යමාන වන්නේ පාර්ලිමේන්තුව එය විසින් සම්මත කරන නීති සම්බන්ධයෙන් කිසිදු නෛතික සීමාවකට (ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව වැනි) යටත් නොවන බව සහ පාර්ලිමේන්තුව විසින් නිසි ලෙස සම්මත කරනු ලබන නීති වලංගු නොවන බව ප්‍රකාශ කිරීමට අධිකරණයට බලයක් නොමැති බවයි. (උදා: නීතිකරණයන් අධිකරණයේ සමාලෝචනයට භාජන කිරීමක් සිදුකළ නොහැකිය). එයින් වැඩිදුරටත් ගම්‍යමාන වන්නේ අනාගත නීතිකරණයන්ගේ අන්තර්ගතය, ස්වභාවය හා ආකෘතිය සම්බන්ධයෙන් පාර්ලිමේන්තුවකට අනාගත පාර්ලිමේන්තුවක් බැඳ තැබිය නොහැකි බව සහ ඕනෑම පූර්ව නීතිකරණ පනත් සංඛ්‍යාවක් වෙනස් කිරීමට හෝ අහෝසි කිරීමට පාර්ලිමේන්තුවකට හැකි බව ය. එක්සත් රාජධානිය සහ නවසීලන්තය පාර්ලිමේන්තු පරමාධිපත්‍යයෝ වෙති.

## பாராளுமன்ற இறைமை

பாராளுமன்றம் அல்லது சட்டசபைதான் அதி உயர் சட்ட அதிகாரமுடைய அமைப்பு என்று கூறும் எண்ணக்கருவே பாராளுமன்ற இறைமை எனப்படும். இதன் உட்கிடையான கருத்து அரசியல் யாப்பு போன்ற எந்தவித கட்டுப்பாடுகளும் பாராளுமன்றத்தின் சட்ட ஆக்க அதிகாரத்தினை கட்டுப்படுத்த மாட்டா என்பதுவே. பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களை சட்டவலு அற்றவை என்று பிரகடனம் செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இல்லை. பாராளுமன்றம் இயற்றிய சட்டம் பின்னர் பாராளுமன்றத்தினால் மாற்றப்படலாம். அல்லது முற்றாக நீக்கப்படலாம். இதனால் பெறப்படும் முடிவு யாதெனில் ஒரு அரசாங்கத்தின் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் இன்னொரு அரசாங்க காலத்தில் மாற்றப்படலாம் என்பதாகும். பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களின் உள்ளடக்கம் தன்மை, வடிவம் ஆகியனவற்றை முன்பு ஆட்சி செய்த அரசாங்கங்கள் கட்டுப்படுத்தி வைக்கவும் முடியாது. நீதிமன்ற மீளாய்வு என்னும் கருத்துப்படி பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை நீதிமன்றங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தலாம். பாராளுமன்ற இறைமை என்ற கருத்து நீதிமன்ற மீளாய்வுக்கு இடமளிப்பதில்லை. ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் பாராளுமன்ற இறைமை உள்ளது.

## PARLIAMENTARY SOVEREIGNTY

The concept of parliamentary sovereignty means that Parliament (or the legislature) is the supreme legal authority in a country. It implies that Parliament is not subject to any legal limitation (such as a constitution) with regard to the laws it can make and that the courts have no power to declare laws duly passed by Parliament invalid (i.e. there is no judicial review of legislation). It further implies that Parliament cannot bind its successors as to the content, manner and form of subsequent legislation and that any prior legislative acts may be changed or repealed. The United Kingdom and New Zealand are countries in the world in which the doctrine of parliamentary sovereignty forms the constitutional basis of government.

88

| ජන සහභාගීත්ව ප්‍රජාතන්ත්‍රවාදය | பங்கேற்பு ஜனநாயகம் | PARTICIPATORY DEMOCRACY |
|---|---|---|
| ජනසහභාගීත්ව ප්‍රජාතන්ත්‍රවාදය යනු තීරණ ගන්නා ආයතනයන්හි පුරවැසියන්ගේ ප්‍රවේශය හා සහභාගීත්වය මත පදනම් වූ ප්‍රජාතාන්ත්‍රික ආකෘතියකි. සිද්ධාන්තයක් ලෙස සමාජයේ සාමාජිකයන් හට තීරණ ගැනීමේ ක්‍රියාවලියට ප්‍රවේශ වීමේ සහ ඊට දායකවීමේ ඉඩ ප්‍රස්තාවන් නිර්මාණය කිරීමට එය උත්සාහ ගනී. සැබෑ රාජ්‍යකරණය තේරීපත්වූ නියෝජිතයන් හට පවරා පුරවැසියන්ගේ සහභාගිත්වය ඡන්දය පාවිච්චි කිරීමට සීමා කිරීමට යොමුවන නියෝජිත ප්‍රජාතන්ත්‍රවාදය පිළිබඳ සංකල්පයට එරෙහිව සිටින්නකි ජන සහභාගීත්ව ප්‍රජාතන්ත්‍රවාදය. | முடிவெடுக்கும் அதிகாரமுடைய நிறுவனங்களில் பிரஜைகளின் பங்கேற்பு மூலம் ஜனநாயக நடைமுறைகளைச் செயற்படுத்தல் பங்கேற்பு ஜனநாயகம் எனப்படும். சமூகத்தின் உறுப்பினராகவிருக்கும் எல்லோருக்கும் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதலை இது குறிக்கும். பங்கேற்புக்கான பெறுவழியும் முடிவுகளை எடுத்தலில் பங்கேற்றலும் இருத்தல் வேண்டும். பிரதிநிதித்துவ ஜனநாயகம் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதில் பங்கேற்பதை மட்டும் குறிக்கிறது. உண்மையான ஆட்சி அதிகாரம் தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடமே இருக்கும். பங்கேற்பு ஜனநாயகம் இக் கருத்துக்கு மாறானது. அது முடிவெடுத்தலில் மக்களின் பங்கேற்பை கருதுகிறது. | Participatory democracy is a form of democracy that is based on citizens' access and participation in decision-making institutions. As a doctrine, it seeks to create opportunities for all members of society to have access and contribute to decision-making. Participatory democracy stands in opposition to representative democracy, which tends to limit citizen participation to voting, leaving actual governance to elected representatives. |

89

| ජනතාව | மக்கள் | PEOPLE |
|---|---|---|
| මානවයන් කණ්ඩායමක් ලෙස හෝ අනියත සංඛ්‍යාවන් සේ ගත් කල ජනතාව සේ හැඳින්වේ. | மானிடரை ஒரு குழுவாகக் குறிப்பதற்கும், பெரும் எண்ணிக்கையினரான நபர்களை ஒன்று சேர்த்துக் குறிப்பதற்கும் மக்கள் என்ற சொல் உபயோகிக்கப்படுகிறது. | Humans considered as a group or in indefinite numbers. |

90

| ජනතාවෝ | தேசிய இனம் | PEOPLES |
|---|---|---|
| විශේෂිත ජාතියකට, ප්‍රජාවකට හෝ ජනවාර්ගික කණ්ඩායමකට අයත් මනුෂ්‍යයන්, උදාහරණ : ඕස්ට්‍රේලියාවේ ස්වදේශීය ජනතාවෝ. | 'Peoples' என்று பன்மையில் குறிப்பிடும் பொழுது தேசிய இனம் என்ற பொருளிலும் சமூகம் இனக்குழுமம் என்ற பொருளிலும் இச் சொல் உபயோகிக்கப்படுகிறது. உதாரணமாக அவுஸ்திரேலியாவின் சுதேசிய மக்கள் என்ற தொடரில் மக்கள் என்ற சொல் இக்கருத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. | The human beings of a particular nation, community or ethnic group. For example, the indigenous peoples of Australia. |

**91**

## බහුත්ව ජාතික අනන්‍යතා

යම් පුද්ගලයකුට බහුත්ව ජාතික අනන්‍යතාව ඇති වන්නේ ඔහු හෝ ඇය ජාතීන් එකකට වඩා වැඩි සංඛ්‍යාවකට අයත් වන හෝ ස්වේච්ඡාවෙන් බද්ධ වන විටක දී ය. උදා : ස්කොට් ජාතිකයන්ට බහුත්ව ජාතික අනන්‍යතා තිබේ. ස්කොටිෂ් සහ බ්‍රිතාන්‍ය වශයෙනි.

## பன்மைத்துவ தேசிய அடையாளங்கள்

தனிநபர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனத்தை சேரும் போது அல்லது சேர்ந்தவராக இருக்கும் போது பல்வேறு தேசிய அடையாளங்களைக் கொண்டிருப்பதை இது குறிக்கும். பல்தேசிய இனங்கள் வாழும் நாட்டில் தனிநபர்களுக்கு பல அடையாளங்கள் உள்ளன. உதாரணமாக ஸ்கொட்லாந்து மக்கள் "ஸ்கொட்லாந்தியர்" என்ற அடையாளத்தையும் "பிரித்தானியர்" என்ற அடையாளத்தையும் கொண்டிருக்கின்றனர்.

## PLURAL NATIONAL IDENTITIES

An individual has plural national identities when he or she belongs to or self-affiliates with more than one nation. Scots have plural national identities: Scottish and British.

**92**

## බහුත්වවාදය

බහුත්වවාදය යන වචනය පුළුල් පරාසයක ක්ෂේත්‍රයන් හි දී වෙනස් ආකාරයන්ගෙන් භාවිත වේ. එයට විස්තරාත්මක හා ව්‍යවහාරයෙන් තහවුරු වන අර්ථයන් තිබේ. විස්තරාත්මක අර්ථයෙන් ගත් කල බහුත්වවාදය යනු සාමාන්‍ය ලෙස විවිධත්වය පිළිගැනීම වේ. සිද්ධාන්තයක් ලෙස එය සලකන්නේ විවිධත්වය යහගුණයක් ලෙසයි.

අ) දේශපාලන විද්‍යාවේ දී මෙම යෙදුම පළමුව විස්තර කරන්නේ සමාජයේ වෙනස් උවමනා එපාකම් සහිත බහුවිධ කණ්ඩායම් (වෘත්තීය සමිති, ආගමික කණ්ඩායම්, වෘත්තීයවේදී සංගම් ආදිය) වල පැවතීම යි. සිද්ධාන්තයන් ලෙස එය විශ්වාස කරන්නේ ලිබරල් ප්‍රජාතන්ත්‍රවාදී සමාජයන්හි බලය එක්ඉහළ පැලැන්තියක් විසින් රඳවා ගැනීමට නොදී ස්වයං

## பன்மைத்துவம்

பன்மைத்துவம் என்னும் சொல் பல்வேறு துறைகளில் பல்விதமான கருத்துக்களில் உபயோகிக்கப்படும் சொல். அது விபரிப்பு முறையான பொருளுடைய சொல். ஒரு நியமத்தை எடுத்துக் கூறுவதாகவும் உபயோகிக்கப்படும். ஒரு விடயத்தில் பன்மைத்துவம் உள்ளது எனக் கூறும் போது உண்மை நிலை இன்னது என விபரிப்பதாய் இருக்கும். பன்மைத்துவம் ஓர் உயர்ந்த இலட்சியப் பண்பு என்ற நியமமாகவும் கூறப்படுவதுண்டு. உதாரணமாக 'இலங்கை ஒரு பன்மைத்துவ சமூகம் ஆகும்' என்ற கூற்றில் விபரிப்பு, நியமம் என்ற இரு பொருளும் உள்ளது.

அ) அரசியல் விஞ்ஞானத்தில் பன்மைத்துவம் என்ற சொல் பல்வித அக்கறைகளுடையனவான தொழிற்சங்கங்கள், சமயப் பிரிவுகள், தொழில் அமைப்புக்கள் போன்ற சமூகக் குழுக்கள் இருப்பதைக் குறிப்பிடும். ஒரு கோட்பாடு என்றவகையில்

## PLURALISM

The word 'pluralism' is used in different ways in a wide range of fields. It has a descriptive and prescriptive sense. In the descriptive sense, pluralism is generally the acknowledgment of diversity. As a doctrine, it holds that diversity is a virtue.

a) In political science, the term describes the existence in society of multiple groups with different interests (trade unions, religious groups, professional associations, etc.). As a doctrine, it holds that power in liberal democracies should be dispersed among autonomous interest-groups rather than

